### (எ) நியமனத்திற்குப் பின் இருப்பிடம்:- (கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு மட்டும்)

இப்பதவியில் பணியமர்த்தப்படும் ஒவ்வொருவரும், அவர் பொறுப்பிலிருக்கும் கிராமத்திலேயே அவர் அப்பதவியில் பொறுப்பிலிருக்கும் காலம்வரை தொடர்ந்து வசிக்க வேண்டும்.

### 6. பிணையத் தொகை (இளநிலை உதவியாளர் (பிணையம்) மற்றும் வரித் தண்டலர் நிலை – I பதவிகளுக்கு மட்டும்)

பேரூராட்சி நிர்வாகத் துறை / வேளாண்மைத் துறை / கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆகிய துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர் (பிணையம்) மற்றும் வரித் தண்டலர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனத்தின் போது நியமன அதிகாரி குறிப்பிடும் பிணையத் தொகையினைச் செலுத்த வேண்டும்.

### 7. சலுகைகள்

(i) ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர், ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பிற வகையினைச் சார்ந்தவர்களுக்கான வயது / தகுதி மற்றும் கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் “விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்” பத்தி 12 முதல் 14 ஆம் பத்தி வரை அறிவிக்கப்பட்டுள்ளன.

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சலுகையை கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்குரிய ஆதாரங்களை தேர்வாணையம் கோரும்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படக்கூடும்.

**குறிப்பு**

**முன்னாள் இராணுவத்தினர், ஏதேனும் ஒரு பிரிவு / பணியில் அடங்கிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், பின்னர், வேறு எந்த நியமன நிகழ்வுகளிலும்** முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையை கோர முடியாது.

[தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3 (j) (vii)]

### 8. எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் (கொள்குறி வகை) (OMR Method):-

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் (அனைத்து வகுப்பினருக்கும்) |
|---|---|---|---|
| **ஒற்றைத் தேர்வுத்தாள் (பத்தாம் வகுப்பு தரம்)**<br>பொது அறிவு (75 வினாக்கள்)<br>+<br>திறனறிவுத் தேர்வு (25 வினாக்கள்)<br>+<br>பொதுத்தமிழ் /<br>பொது ஆங்கிலம்<br>(100 வினாக்கள்)<br>(மொத்தம் = 200 வினாக்கள்) | 3 மணி நேரம் | 300 | 90 |